# விவசாயக் கண்காட்சி – 2019

மாகாண விவசாயத் திணைக்களத்தின் 2019 ஆண்டிற்கான விவசாயக் கண்காட்சியானது யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையான 05 நாட்களிற்கு "காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு நஞ்சற்ற உணவுற்பத்தியில் தன்னிறைவை நோக்கி……..." எனும் தொனிப்பொருளின் கீழ் நடாத்தப்பட்டது. இக்கண்காட்சியில் விவசாயத்திணைக்களத்துடன் இணைந்து விவசாயத்துடன் தொடர்புடைய திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள், நாற்று மேடையாளர்கள்,பல்கலைக்கழத்தின் விலங்கியல் மற்றும் மனைப்பொருளியல் பீடங்கள் என 104 காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டன. இக் காட்சிக்கூடங்களில் விவசாயிகள், பண்ணைப் பெண்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய செய்கையில் ஆர்வமுடைய அனைவரும் பயன்பெறும் வகையில் விவசாயம் சார்ந்த தொழில்நுட்பத் தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டு உரிய விளக்கங்கள் வழங்கப்பட்டன.

விவசாயக்கண்காட்சியின் ஆரம்ப வைபவமானது மாகாண விவசாயப்பணிப்பாளர் திரு.சி. சிவகுமார் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. வடமாகாண ஆளுநர் கௌரவ கலாநிதி சுரேன் ராகவன் அவர்களினால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. அத்தருணத்தில் பங்காளர்களான விவசாயிகளையும் இணைத்துக்கொண்டு திறந்துவைத்தார்.

யாழ் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அஞ்சனாதேவி சிறீரங்கன் தலைமையிலான குழுவினரால் இக்கண்காட்சியானது ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. மாகாண விவசாயப் பணிப்பாளர் திரு.சி.சிவகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சியின் தொடக்கநாள் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் கௌரவ கலாநிதி சுரேன் ராகவன், மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தன்சிறி பண்டார கருணாரத்ன, ஆளுநரின் செயலாளர் திரு.எஸ்.சத்தியசீலன், விவசாய அமைச்சின் செயலாளர் திரு.கே.தெய்வேந்திரம், கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இ.இளங்கோவன், பேரவைச் செயலக செயலாளர் திருமதி.ரூபினி வரதலிங்கம், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.ந.வேதநாயகன், பிரதிப் பிரதம செயலாளர் பொறியியல் சேவைகள் எந்திரி.எஸ்.சண்முகானந்தன், பிரதிப் பிரதம செயலாளர் ஆளணி மற்றும் பயிற்சி திருமதி ஸ்ரான்லி டிமெல், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி வே.பிறேமகுமார், யாழ் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திரு. எஸ்.நிசாந்தன், யாழ் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி.கை.சசிப்பிரபா, பரந்தன் விவசாயப் பாடசாலையின் அதிபர் திருமதி செ.சுகந்தி, திருநெல்வேலி விவசாய ஆராயச்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி கலாநிதி தி.கருணைநாதன், வவுனியா விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் திரு.தெ.யோகேஸ்வரன், நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் திரு.தியாகமூர்த்தி, விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் இக் கண்காட்சியின் தொடக்க நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

கண்காட்சியின் ஆரம்ப வைபவத்தைத் தொடர்ந்து கண்காட்சி வளாகத்தில் சிறந்த விவசாயச் செயன்முறைக்கான தரச்சான்றிதழ் பெற்ற விவசாயிகளின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையமும் கௌரவ ஆளுநர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் சிறந்த விவசாய நடமுறைகளின் கீழ் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆறு விவசாயிகளுக்கான சான்றிதழும் கௌரவ ஆளுநர் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.

யாழ் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் செயன்முறை ரீதியாக அமைக்கப்பட்ட கண்காட்சித்துண்டங்களில் உள்நாட்டு மரக்கறிகள், மேல்நாட்டு மரக்கறிகள்,மறுவயற்பயிர்களான

வெங்காயம், மிளகாய்,தானியப் பயிர்கள், அவரைப் பயிர்கள், கிழங்குப் பயிர்கள் தாய்த்தாவரத் தொகுதியில் பழப்பயிர்கள், நாற்று மேடைத் தொழில்நுட்பங்கள் தென்னையின்கீழ் பழப்பயிர்ச் செய்கை, மாமரத்தின் கீழ் அன்னாசிச்செய்கை,தென்னையின்கீழ் புல்வளர்ப்பு, கற்றாழைப் பயிர்ச்செய்கை, வீதிமுறைப் பயிர்ச் செய்கை,பூச்சி உட்புகா வலையைப் பயன்படுத்தி மிளகாய் மற்றும் பாகல் செய்கை, விவசாய இயந்திரங்களின் பாவனை, சேதன விவசாயம்,நகர்புறவீட்டுத்தோட்டம்,சமயலறை வீட்டுத்தோட்டம்,அலுவலக விடுதித் தோட்டம், மலர்த் தோட்டம், காளான் செய்கை, தேனீ வளர்ப்பு தொடர்பான விவசாயத் தொழில்நுட்பங்கள் தொனிப்பொருளுக்கேற்ற வகையில் ஸ்தாபிக்கப்பட்டு பங்குபற்றுநர்களிற்கு விளக்கமளிக்கப்பட்டன.

மத்தியவிவசாயத்திணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சி பிரிவிலிருந்து பரந்தன் நெல் ஆராய்ச்சி நிறுவனம்,கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனம், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம், என்பன தமது ஆராய்ச்சி தொடர்பான வெளிப்படுத்தல்களைக் காட்சிப்படுத்தியிருந்தன.

கிளிநொச்சி மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகள் நிலைய ஆய்வுகூடம் மற்றும் யாழ் மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகள் நிலையம் என்பன இணைந்து விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகள் தொடர்பான தமது சேவைகளை இக் கண்காட்சியின் போது பங்குபற்றுநர்களிற்கு வழங்கியிருந்தன.

விவசாயத் தகவல் மையம் மற்றும் விவசாய பிரசுரங்கள் விற்பனை பிரிவினால் விவசாயப்பிரசுரங்களும், பரந்தன் விதைகள் மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனைப் பிரிவினால் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களும் விற்பனை செய்யப்பட்டன.

அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் சிறந்த விவசாயச் செயன்முறைகள் பின்பற்றலுக்கான நிறுவனம் என்பனவும் தமது சேவை தொடர்பான விழிப்புணர்வு காட்சிப்படுத்தலை மேற்கொண்டிருந்தன.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மாடு, ஆடு வளர்ப்பு, பறவைகள் வளர்ப்பு தொடர்பான காட்சிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத்துடன் கால்நடை வளர்ப்பில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குவதற்கேதுவாக நல்லூர் கால்நடை வைத்தியசாலையில் கால்நடை சிகிச்சை முகாம் மற்றும் மருந்து விற்பனை என்பன நடைபெற்றன. இங்கு யாழ்கோ நிறுவனத்தின் பாற்பொருள் விற்பனையும் நடைபெற்றது.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் இலத்திரனியல் முறையில் நெற்காணிப் பதிவு நடைமுறைகள் தொடர்பாகவும் விவசாய அடையாள அட்டை விநியோகம் தொடர்பாகவும் காட்சிபடுத்தலுடன் விளக்கமளிக்கப்பட்டது. மண், நீர் பரிசோதனை தொடர்பாகவும் சூரிய நீரிறைக்கும் இயந்திரப்பாவனை தொடர்பாகவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் பரம்பரிய விவசாய உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றின் உபயோகங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. மேலும் கமநல அபிவிருத்தித் திணைக்களச் செயற்பாடுகள் தொடர்பான விளக்கமும் வழங்க்கப்பட்டது.

நீர்ப்பாசனத் திணைக்களம் வழுக்கையாறு நீர்பாசனத்திட்ட மாதரி காட்சிப்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாண நிலத்தடி நீர் பாவனை மற்றும் முகாமைத்துவம் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. மேலும் ஏற்று நீர்ப்பாசனத்தின் சிறப்பம்சங்கள் தொடர்பான விளக்கமும் வழங்கப்பட்டது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் காலநிலைக் காரணிகளை அளவிடும் உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றினை உபயோகித்து அளவீடுகளை மேற்கொள்ளும் முறைகள் தொடர்பாகவும், திணைக்களத்தின் சேவைகள் தொடர்பான விளக்கமும் பங்குபற்றுநர்களிற்கு வழங்கப்பட்டன.

சுதேச மருத்துவத்துறையின் மூலிகைத்தோட்டத்தில் சுதேச மருவத்துறையில் பயன்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மூலிகைகள் பயிரிடப்பட்டு பராமரிக்கப்பட்டுவருகின்றன. அத்தியவசிய 28 மூலிகைகளின் சிறப்புக்கள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. மூலிகையினால் ஆக்கப்பட்ட இலைக்கஞ்சி, கற்றாளை, நன்நாரி பானங்கள் இலவசமாக வழங்கப்பட்டது. அத்துடன் அவற்றின் போசணை முக்கியத்துவம், செய்முறை விளக்கம் என்பனவும் வழங்கப்பட்டன. நடமாடும் சித்த வைத்திய நிலையத்தினுடாக சுதேச மருவத்துவ சிகிச்சையை நாடிவந்தோருக்கான சிகிச்சை மற்றும் மருந்து விற்பனை என்பனவும் நடைபெற்றன.

தென்னை அபிவிருத்திச் சபையால் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் தொடர்பாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் பனை அபிவிருத்தி சபையால் பனையினாலான கைவினைப் பொருட்கள், பனைசார் உணவு உற்பத்திகள், பனைசார் பராம்பரிய உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றின் செய்முறை விளக்கங்களும் வழங்கப்பட்டன. மேலும் பனை ஆராய்ச்சி நிறுவனத்தால் பனம் உற்பத்திகள் காட்சிப்படுத்தபடுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் செய்முறை விளக்கமும் அளிக்கப்பட்டது.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் மரமுந்திரிகை பயிர்ச்செய்கைத் தொழில்நுட்பங்கள் பராம்பரிய மற்றும் இயந்திரத்தை உயோகித்து கோது அகற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

யாழ் குடா விதையுற்பத்தி கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி வாழைக்குலைச்சங்கம் ஆகியனவற்றின் உற்பத்திப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

கமநல காப்புறுதிச் சபையினால் விவசாயிகளின் விவசாயச் செய்கை தொடர்பான காப்புறுதி நடைமுறைகள் எவ்வாறு செய்யப்படல் வேண்டும் மற்றும் அனுகூலங்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைால் 2020 ஆம் ஆண்டில் 2000 ஏற்றுமதி உற்பத்தியாளர்களை உருவாக்குதல் என்பதை இலக்காகக் கொண்ட விழிப்புணர்வு முகாம் நிகழ்த்தப்பட்டது. அத்துடன் JACHUFI Fruit based Industry, Tholakaddy பழரச உற்பத்தி நிறுவனம் என்பன தமது உற்பத்திகளை விற்பனை செய்தன.

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நன்னீர் மீன் உற்பத்தி, கரையோர மீன் வளர்ப்பு மற்றும் நுகர்வினை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையால் உயிர்பல்வகைமைக் காப்பின் அவசியத்தை உயிர் சங்கிலி தொடர்பூடாக உயிர் மாதிரிகளுடன் விளக்கமளிக்கப்பட்டது. மனைப்பொருளியல் துறையால் உள்ளூர் உணவுகளின் நுகர்வினை ஊக்குவிக்குமுகமாக காட்சிக் கூடம் அமைக்கப்பட்டிருந்தது. அருகிவரும் சிறுதானியங்களான குரக்கன், சாமை, தினை, வரகு, கம்பு போன்றவற்றின் போசணை மற்றும் நோய் பாதுகாப்பு அம்சங்களை முன்னிலைப்படுத்தி தானியங்களையும் அவற்றைப் பதப்படும் முறைகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டதோடு அவற்றிலிருந்து நாம் அன்றாடம் உண்ணும் உணவின் வடிவத்தில் சுவையான உணவுகள் தயாரித்து காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

விவசாயத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள காளான் உற்பத்தியாளர் சங்கம்,தேனீ வளர்ப்பாளர் சங்கம்,சேதனவிவசாயிகள் சங்கம் மற்றும் கற்றாழைச்சங்கம் என்பன தமது சங்க

நடவடிக்கை தொடர்பான காட்சிப்படுத்தலை மேற்கொள்ளப்பட்டதோடு அவர்களின் உற்பத்திகளும் விற்பனை செய்யப்பட்டன.

பண்ணைப்பெண்கள் அமைப்புக்கள், தனியார் தொழில் முயற்சியாளர்கள் பெறுமான அதிகரிப் தொடர்பான காட்சிப்படுத்தலில் பழப்பானங்கள், அரிசி, சிறுதானியம், பனை சார்ந்த உற்பத்திப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டது. இக்கண்காட்சி மூலம் தமது அமைப்பு பெண்களுக்கு ஒருவிழிப்புணர்வு வழங்கப்பட்டதாகவும், சிலபெண்களுக்கு இதன் மூலம் ஒருவேலை வாய்ப்பாக அமைந்ததாகவும் அமைப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

Seer Bio (Pvt) Ltd, திருநாவுக்கரசு நினைவு மாதிரிப்பண்ணை, இயற்கை வழி இயக்கம் Green visvalanka முதலான நிறுவனங்களால் நஞ்சற்ற விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் காட்சிப்படுத்தல்களை மேற்கொண்டு தயாரிப்பு முறைகள் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டதுடன் விற்பனையும் மேற்கொள்ளப்பட்டது.

T.Thirukumaran Prammasakthi Industries, Nutri Food Packers, முல்லைத்தீவு ஒருங்கிணைந்த பண்ணையாளர் சங்கம் என்பன தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியதுடன் விற்பனையையும் மேற்கொண்டனர்.

யாழ் மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி, விற்பனை வைத்திய சேவைகள் கூட்டுறவுச் சங்கம் சுதேச வைத்திய திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் சித்த வைத்திய நிபுணர்களினால் தயாரிக்கப்பட்ட லேகியங்கள் மற்றும் ஆயுள்வேதமருந்துகள் எண்ணெய்வகைகள் காட்சிப்படுத்தப்பட்டு அழிந்து வரும் தமிழ் வைத்தியமுறைகள் குறித்து விளக்கங்கள் வழங்கப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டது.

விவசாயத்துறையிலே நவீனமயமாக்கல் செயற்திட்டம் தொடர்பான காட்சிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு பங்குபற்றுநர்களிற்கு விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இவ் விவசாயக் கண்காட்சியிலே, தேசிய அபிவிருத்தி வங்கி, காகில்ஸ் வங்கி, இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பன பங்குபற்றியிருந்ததுடன், விவசாயத் துறையை நவீனமயப்படுத்துவதில் தமது வங்கிகள் ஆற்றும் சேவைகள் தொடர்பில் தமது காட்சிக்கூடங்களில் காட்சிப்படுத்தியிருந்தன.

இக்கண்காட்சியில்,Jinasena (Pvt) Ltd, Citigardens, Piyadasa & Sons, Hayleys Agriculture, Everpure Hi-Tec (Pvt) Ltd, North Lanka (Pvt) Ltd மற்றும் Cargills போன்ற தனியார் கம்பனிகள் காட்சிக் கூடங்களில் தமது கம்பனி சார்பில் சந்தைப்படுத்தப்படும் விவசாயம் சார் இயந்திரங்கள் மற்றும் பல்வேறு வகையான காட்சிப் பொருட்களைக் காட்சிப்படுத்தியிருந்ததுடன் விற்பனையிலும் ஈடுபட்டன.

இவ் விவசாயக் கண்காட்சியில், பவிசாரு பூங்கனிச் சோலை, நித்திமரக்கன்று உற்பத்தி விற்பனை நிலையம்,V. Garden மற்றும் Karis garden ஆகிய தனியார் நாற்றுமேடையாளர்கள் தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியிருந்ததடன் அவற்றினை விற்பனை செய்வதிலும் ஈடுபட்டிருந்தன.

இக் கண்காட்சியில் வடமாகாணத்தினைச் சேர்ந்த 320 பாடசாலைகளைச் சேர்ந்த 17,254 பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வருகை தந்து கண்காட்சியினைப் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர். மற்றும் விவசாயிகள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கன் என 51354 பேர் வரையில் வருகை தந்து கண்காட்சியினைப் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர்.